## 22-12-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

**தலைப்பு : இலங்கையின் இடதுசாரி இயக்கம் பற்றிய வரலாற்றுப்பார்வை**

**தொடக்கவுரையாடல் : சி. கா. செந்திவேல்**

கடந்த நூற்றாண்டின் இருபதுகளில் தொழிற்சங்க இயக்கம் வளர்ச்சி பெற்று வந்த ஒரு கால கட்டமாகும். இது கொலனிய ஆட்சியின் கீழ் எல்லைக்குட்பட்ட முதலாளித்துவ வளர்ச்சியை சுட்டுவதாகவே அமைந்தது. இச் சூழலில் வசதிபடைத்த உயர் வர்க்க குடும்பங்களில் இருந்து ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் உயர் கல்வி கற்பதற்காக இளைஞர்கள் சென்றனர்.

அங்குள்ள சூழலில் அவர்களில் சிலர் மார்க்சியத்தாலும் பொதுவுடமை இயக்கத்தினாலும் சோவியத் யூனியனின் தோற்றம் வளர்ச்சியினாலும் ஈர்க்கப்பட்டு மார்சியவாதிகளாக நாடு திரும்பினர்.

இவர்களது தீவிர இடதுசாரிக் கருத்துக்கள் இலங்கையில் முன்னெடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தது. இவர்கள் அந்நியராட்சிக்கு எதிராகவும் மக்கள் தொழிலாளர்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகளுக்காக செயல்படுவதைத் தமது நோக்கமாக கொண்டனர்.

1929-31 உலகப் பொருளாதார நெருக்கடி இலங்கை மக்களைப் பாதித்தது. மலேரியா நோயினால் ஒரு லட்சம் மக்கள் இறந்தார்கள். பிரித்தானியர்களுக்கு எதிரான சூரியமலர் இயக்கத்தை முன்னெடுத்தார்கள். இவற்றின் கூட்டான முயற்சியும் செயற்பாடுமே 1935 டிசம்பர் 18 ஆம் திகதி லங்கா சமசமாஜக் கட்சியை தோற்றுவிக்க முடிந்ததற்கு அடிப்படையானது.

வைத்தியக் கலாநிதி எஸ்.ஏ. விக்ரமசிங்க, பிலிப் குணவர்த்தன, என்.எம்.பெரேரா,லெஸ்லி குணவர்த்தன, கொல்வின் ஆர்.டி.சில்வா, ராபர்ட் குணவர்த்தன போன்றோர் அதன் ஆரம்பகர்த்தாக்கள் ஆவர். இதுவே இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியும் இடதுசாரிக் கட்சியுமாகும்.

இக் கட்சி 1940 ல் பிளவடைந்து சமசமாஜக் கட்சி ட்ரொட்ஸ்கியிசத்தை ஏற்றுக்கொள்ளவும் அதனை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மார்க்சியம் லெனினிச - சோவியத் யூனியனை ஆதரித்தும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினர். அதன் முன்னோடியாக ஐக்கிய சோசலிசக் கட்சியாகும்.

1943 ஜூலை 3 ஆம் திகதியே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டது. இதில் எஸ்.ஏ.விக்ரமசிங்க,பீட்டர் கெனமன், எம்.ஜி.மெண்டிஸ், பொன்.கந்தையா, அ.வைத்திலிங்கம் போன்றோர் இருந்தனர். நா.சண்முகதாசன், மு.கார்த்திகேசன் போன்றோர் கம்யூனிஸ்ட் கட்சியில் முழு நேரப் பணியாற்றியதுடன் வடக்கிலும் இடதுசாரிக் இயக்கம் 1945 ல் விரிவுபெற்றது.

சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளே இலங்கை இடதுசாரி இயக்கத்தின் அடிப்படையான கட்சிகள். இவை இரண்டும் பிரித்தானியர் ஆட்சியை அகற்றி சுதந்திர இலங்கைக்கான இயக்கம் நடாத்தின. தொழிற்சங்க இயக்கத்தை வலிமை மிக்க தொழிலாளர் இயக்கமாகக் கட்டிவளர்த்தன. தொழிற்சங்க போராட்டங்கள் வலிமையடைந்தன.1947 ல் பொது வேலை நிறுத்தம், 1953 ல் மாபெரும் ஹர்த்தால். துறைமுகம், புகையிரதம், வெள்ளவத்தை நெசவாலை, டிராம் வண்டி தொழிலாளர்கள், அச்சுத் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், லேக்ஹவுஸ், கோல்ஃபேஸ் ஹோட்டல், ரம்ஸ் குரூப் உட்பட சகல துறைகளிலும் தொழிற்சங்க இயக்கத்தை இவ்விரு கட்சிகளும் முன்னெடுத்தன.

வடக்கிலும் பஸ் தொழிலாளர்கள், சுருட்டு தொழிலாளர்கள், சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மற்றும் கிழக்கில் காகித ஆலைத் தொழிலாளர்கள் மத்தியில் தொழிற்சங்க இயக்கம் வேரூன்றி வளர்ந்தது. அதே போன்று சமூக ஏற்றத்தாழ்வு சாதியப் புறக்கணிப்புகளுக்கு உள்ளான தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும் இவ் இடதுசாரி இயக்கம் வலுவடைந்து வந்தது.

மிகுதி அடுத்தபக்கம்



சர் சார்லஸ் ஸ்பென்ஸர் சாப்ளின் (Sir Charli Spencer Chaplin, ஏப்ரல் 16, 1889 - டிசம்பர் 25, 1977) என்ற இயற்பெயர் கொண்ட சார்லி சாப்ளின், ஹாலிவுட் திரையுலகின் மிகப் புகழ்பெற்ற கலைஞர். இவருக்கு நடிகர், இயக்குநர், இசையமைப்பாளர், திரைக்கதை எழுத்தாளர், திரைப்பட தொகுப்பாளர், திரைப்படத் தயாரிப்பாளர் என்று பல பரிமாணங்கள் உண்டு.

இவரது முதல் டாக்கீஸ் 1940 ஆம் ஆண்டில் வெளியான "தி கிரேட் டிக்டேடர்" (The Great Dictator). இது அடால்ஃப் ஹிட்லரையும் அவரது பாசிச கொள்கையையும் எதிர்த்து குரல் கொடுத்த படம். இவரது கடைசி திரைப்படங்கள் "தி கிங் இன் நியூ யார்க்" (1957), "தி சாப்லின் ரெவ்யூ" (1959) மற்றும் சோஃபியா லாரென், மார்லன் ப்ராண்டோ நடித்த "அ கௌண்டஸ் ஃப்ரம் ஹாங்காங்".

சாப்ளினின் அரசியல் சிந்தனைகள் இடது சார்புடையதாகக் கருதப்படுகிறது. இதனையே இவரது திரைப்படங்களில், முக்கியமாக "மாடர்ன் டைம்ஸ்" (Modern Times) பிரதிபலித்தன. இப்படம் பாட்டாளிகள் மற்றும் ஏழைகளின் கவலைக்கிடமான நிலைமையை சித்தரித்தது. "மெக்கார்த்திச காலங்களில்" இவர் அமெரிக்க கொள்கைகளுக்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், கம்யூனிஸ்ட்-எனவும் சந்தேகிக்கப்பட்டார். ஜே.எட்கார் ஹூவர் எஃப்.பி.ஐ-யிடம் இவரை கண்காணிக்குமாறு உத்தரவிட்டு, அமெரிக்காவில் சாப்ளின் வாழும் உரிமையை நீக்க முயற்சித்தார்.

" நான் மழையில் நனைவதை விரும்புகிறேன், நான் அழுவது யாருக்கும் தெரியாது என்பதால்"

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

**சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.**

**அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.**

**நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.**

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## இலங்கையின் இடதுசாரி இயக்கம் பற்றிய வரலாற்றுப்பார்வை

(முன்பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்களில் பங்கு கொண்டு வெற்றிகள் கிடைத்தனவாயினும் ஆட்சி அதிகாரத்திற்கு வர முடியவில்லை. தனி முயற்சி வெற்றி இன்றிப் போகவே, சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து முற்று முழுதான பாராளுமன்றக் கட்சிகளாயின. அதனால் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொள்ள முடிந்ததே தவிர தொழிலாளர்களுக்கும் மக்களுக்கும் நேர்மையான இடதுசாரிகளாக இருக்கு முடியவில்லை. அதே போன்று தேசிய இனங்களது ஒடுக்குமுறை சார்ந்த பிரச்சனைகளில் மக்கள் பக்கம் நிற்காது தமது முன்னைய நிலைப்பாட்டில் மாற்றம் கண்டன.

1960 களின் நடுக்கூற்றுக்குப் பின்பு முற்று முழுதாகவே தொழிலாளர்கள் - விவசாயிகள் சிறுபான்மை தேசிய இனங்களின் விரோதத்தை சம்பாதித்து கொண்டும் ஆளும் அதிகாரத்தின் பங்காளியாகினர். அதனால் இரு காட்சிகளில் இருந்தும் பிளவடைந்தே நா.சண்முகதாசன் தலைமையில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியும், வாசு - விக்ரமபாகு தலைமையில் நவ சமசமாஜக் கட்சியும், பின்னர் சண்முகதாசனிடம் இருந்து பிரிந்து ரோகன தலைமையில் ஜே.வி.பி.யும் உருவாகின. அதன் பின்னர் வெவ்வேறு காலங்களில் மார்க்சிய லெனினிச அடிப்படையில் பல்வேறு கட்சிகள் குழுக்கள் உருவாகின. அவற்றில் ஒன்றே புதிய ஜனநாயக மார்க்சிய லெனினிசக் கட்சியாகும்.

இவ்வாறு கடந்த 75 வருடங்கள் முழுமையாக நோக்குமிடத்து இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்று வளர்ச்சியில் சாதகமான பாதகமான அம்சங்கள் பலதை காணமுடியும். இவ் இடதுசாரி இயக்கம் ஆரம்ப காலம், எழுசிக் காலம், பின்னடைவுக் காலம், வீழ்ச்சிக் காலம் என்ற கட்டங்களின் ஊடாகவே பயணித்து வந்துள்ளது. பாராளுமன்றப் பாதை என்ற சந்தர்பவாத அரசியலானது இவ் ஆரம்பகால இடதுசாரிக் கட்சிகள் இரண்டையும் சீரழித்து செயலிழக்கச் செய்துவிட்டது. அது மட்டுமன்றி அதிகார மோகத்தால் பேரினவாத முதலாளித்துவத்திற்கும் அவை தம்மைப் பலியாக்கி கொண்டன. இவை விரிவாக நோக்கவேண்டியவையாகும்.

## தமிழில் ஒலி நூல்கள்

(இந்த வாரம் இடம்பெறவுள்ள உரையாடலுக்கான முன்வரைவு.

மு. மயூரன்

ஒலிநூல்கள் உலகில் பல மொழிகளிலும் பல்வேறு தேவைகளுக்காக ஆக்கப்படுகின்றமை.

ஆரம்பகாலங்களில் இசைத்தட்டுக்கள், ஒலிநாடாக்கள் போன்றவற்றின் மூலம் ஒலிநூல்கள் ஆக்கப்பட்டுப் பகிரப்பட்டமை.

கணிநுட்பத்தின் வருகையும் உரையிலிருந்து மென்பொருட்கள் மூலம் குரலை உருவாக்கும் வசதிகளும் ஒலி நூல் உருவாக்கத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்.

தமிழில் ஒலி நூல் உருவாக்க முயற்சிகள்.

ஒலி நூல்களின் பல்வேறுபட்ட தேவைகளும் பயன்பாடுகளும்.

ஒலிநூல்களுக்கான அனைத்துலக நியமங்கள்.

"ஒலிநூல்" திட்டமும் சமூக விஞ்ஞான கற்கைவட்டமும்.

(நேரமிருப்பின்) ஒலிநூல் ஒன்றை கணினியைப்பயன்படுத்தி உருவாக்கிக்காட்டுதல்.

கூட்டுமுயற்சியில் ஒலி நூல்களை உருவாக்குவதற்கான திட்டங்கள்பற்றியதும், அதனை நடைமுறைப்படுத்துவது பற்றியதுமான கலந்துரையாடல்

சமூகவிஞ்ஞானக் கற்கைவட்டம் ஒலிநூல் திட்டத்தைத் தொடர்வதற்கான குழுவினை உருவாக்குதலும் நிகழ்ச்சித் திட்டமிடலும்.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.




Thanks : leftycartoons.com